# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2224 - 2021 අප්‍රේල් මස 16 වැනි සිකුරාදා - 2021.04.16**

*2224 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 114 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

113 - B 082222 - 353 (2021/04)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/59626.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சீபீ/பீஎல்சீ/எல்5/பலு04.

## அரசாங்க காணி ஒழுங்குவிதிகளின் கீழ் 21(2) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டத்தில் பலுகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 590, காஸ்யப்பகம கிராம அலுவலர் பிரிவில் ஹபரண கிராமத்தில் அ. ந. அ. 848 அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் 01 ஆவது நிலத்துண்டின் பரிமாணம் 01 ஏக்கர் 03 றூட் 20 பேர்ச் இனை வாணிப நடவடிக்கைக்காக திரு. ரணசிங்க ஆரச்சிகே தில்ஹான் சஞ்ஜீவ என்பவர் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :-

வடக்கு : ஊடு பாதை சேமம் (பாதுகாப்பு) மற்றும் ஜயந்த திசாநாயக்கவின் வதிவு காணி ;
கிழக்கு : ஊடு பாதை சேமம் (பாதுகாப்பு) மற்றும் டபிள்யூ. எம். தம்மிகா குமாரியின் காணி ;
தெற்கு : வன பாதுகாப்பு காணி ;
மேற்கு : ஜயந்த திசாநாயக்கவின் வதிவு மற்றும் வன பாதுகாப்பு காணி.

03. கோரப்பட்டுள்ள காணி தேவையான காரணத்திற்காக குத்தகைக்கு வழங்கப்பட இயலும் ஆகையினால் அரசாங்கத்தின் சட்டமாக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் அனுமதித்த தினம் தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- கௌரவ அமைச்சர் அனுமதித்த வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐம்பது இலட்சத்தினை விட (ரூ. 50,00,000.00) குறைவாகும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் அந்த வருடத்தில் காணியின் முன்னேற்றப்படாத பெறுமதியில் 2% ஆகும். கௌரவ அமைச்சர் அனுமதித்த வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐம்பது இலட்சத்தினைவிட (ரூ. 50,00,000.00) அதிகமாகும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் அந்த வருடத்தில் காணியின் முன்னேற்றப்படாத பெறுமதியில் 4% ஆகும். குத்தகைப் பெறுமதி ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கும் ஒரு தடவை திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் அது கடந்த 05 வருடகால முடிவில் அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகைத் தொகையுடன் 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைக் கட்டணம்.**- இல்லை ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்ப தினம் தொடக்கம் 01 வருடத்தினுள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் விதம் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வாணிப நடவடிக்கைக் காகத் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைக்காக பயன்படுத்தப் படக் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கு இந்தக் குத்தகை கட்டுப்படல் வேண்டும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த அபிவிருத்தி நிலைமையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரரினால் காணியினைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தினை அடைவதற்கு உரிய கால எல்லையினுள் இயலாதுவிடின் குத்தகையினை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ;

(ஏ) கௌரவ அமைச்சர் அனுமதித்த திகதி தொடக்கம் ஐந்து வருடங்கள் கடக்கும் வரை இடைகுத்தகை வழங்கல் அல்லது அளித்தலுக்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் இடையறாது செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகை செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் உடன்படிக்கை தானாகவே இரத்துச் செய்யப்படும்.

03. வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் 06 வார காலத்தினுள் உரிய காணி வழங்கப்படக் கூடாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களினை எழுதி எனக்குச் சமர்ப்பிக்காவிடின் கோரிக்கைக்கு இணங்க இந்த குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. எம். எஸ். ஜீ. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஏப்பிறல் 16.

04-437